# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) – 2008 / 2009

## HELD IN AUGUST – 2009

## BBA / COM 35 – E COMMERCE

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

நேரம்: 03 மணித்தியாலங்கள்

01. கீழ்வரும் கூற்று பத்திரிகை ஒன்றின் வியாபாரப் பக்கத்தில் காணப்பட்டது.

அ) இணையம் மூலமாக இயங்குகின்ற சிறிய மற்றும் புதிய நிறுவனங்களுக்கு வினைத்திறனான மற்றும் கவர்ச்சிகரமான இணையப் பக்கத்தினை உருவாக்குதல் அத்தியாவசியமானது. வேறுபட்ட நிறுவனங்கள் வேறுபட்ட இணைய பிரசன்னக் குறிக்கோள்களை ஏற்படுத்தலாம்."

கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கி இணையப் பிரசன்னக் குறிக்கோள்கள் பற்றி ஒரு அறிக்கை எழுதும் படி நீர் கேட்கப்படுகின்றீர்:

* இணையப் பிரசன்ன குறிக்கோள்களை அடைதல்
* இணையத்தள வருகை தருனர்களின் (website visitors) தேவைகளைப் பூர்த்தி செய்தல்
* இலத்திரனியல் சந்தைப்படுத்தல் பெறுமதிச் சங்கிலி
* இணையத்தள இணைப்புக்கள் - உள்ளடக்கம், வகை போன்றன
* இணையத்தள பராமரிப்பு
* சர்வதேச வலையமைப்பு அளவீட்டு அலகின் வரை விலக்கணத்திற்கான அளவீடு

(14 புள்ளிகள்)

ஆ) கீழ்வரும் கூற்று முகாமைத்துவ சிந்தனையாளர்களினால் கொடுக்கப்படுகின்றது. "பெறுமதி சங்கிலி மாதிரி தகவல் தொழில்நுட்பம் ஒரு துணை செய்முறை என விபரிக்கின்றது."

* நீர் இக்கூற்றை ஏற்பீரா? அல்லது இல்லையா? (01 புள்ளிகள்)
* இக்கூற்றினை விமர்சிக்குக. (05 புள்ளிகள்)

நீர் இதற்கு ஏதாயினுமொரு நிறுவனத்தினை அல்லது கைத்தொழிலை உதாரணமாக்குக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. அ) சமகால வியாபார மகாநாட்டிற்கு வள ஆளணியினராக நீர் அழைக்கப்பட்டுள்ளீர். மகாநாட்டின் தலைப்பு இலத்திரனியல் வர்த்தகம். ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு எழுமாற்றுத் தலைப்பு ஒதுக்கப்படுகின்றது. நீர் ஓர் அணியின் தலைவர். உமது தலைப்பு இலத்திரனியல் விளம்பரம். கலந்துரையாடலின் இறுதியில் குறிப்பிட்ட தலைப்பில் சொற்பொழிவாற்ற வேண்டும். சொற்பொழிவின் உடலை கையெழுத்தில் எழுதுக.

கீழ்வரும் விடயங்களை உள்ளடக்குக.

* இலத்திரனியல் விளம்பரம் (03 புள்ளிகள்)

(தொடர்.........2ல்)

* பல்வேறு இலத்திரனியல் விளம்பரக் கருவிகள் (03 புள்ளிகள்)

* இலத்திரனியல் விளம்பர அளவீடுகள் (03 புள்ளிகள்)

ஆ) ஓர் இலத்திரனியல் வியாபாரத்தினை மேற்கொள்ளும்போது, வியாபாரத்திற் கெதிரான பாதுகாப்புப் பிரச்சினைகளை (Security Issues) தானாகவே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்."

* இலத்திரனியல் வியாபார சூழலில் காணப்படுகின்ற பாதுகாப்பு அச்சுறுத்தல்களை சுருக்கமாகக் கூறுக. (03 புள்ளிகள்)

* அவற்றிற்கான சாத்தியமான தொழில்நுட்ப தீர்வுகள் சிலவற்றை எழுதுக. (03 புள்ளிகள்)

இ) இலத்திரனியல் வர்த்தகத்தின் விமர்சனங்களை (நன்மை, தீமை) சுருக்கமாகக் கூறுக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. அ) கீழ்வருவனவற்றை உள்ளடக்கி இலத்திரனியல் கொடுப்பனவு தொடர்பில் ஒரு ஞாபகக் குறிப்பு (Memorandum) எழுதும்படி நீர் வேண்டப்படுகின்றீர்:

* இலத்திரனியல் கொடுப்பனவுடன் தொடர்புடைய கட்சியினர்.

(05 புள்ளிகள்)

* இலத்திரனியல் கொடுப்பனவு முறையின் பண்புகள்

(05 புள்ளிகள்)

* B-2-C இற்கான இலத்திரனியல் கொடுப்பனவு முறைகள்

(05 புள்ளிகள்)

ஆ) பாரம்பரிய வர்த்தகத்தை இலத்திரனியல் வர்த்தகத்திலிருந்து வேறுபடுத்துக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. அ) "சர்வதேச வலையமைப்பு கைத்தொழிலில் இடம் பெறும் போட்டித்தன்மையின் வகையை மாற்றியிருக்கின்றது."

* இக்கூற்றினை ஏற்பீரா? அல்லது இல்லையா? (02 புள்ளிகள்)

* போட்டரின் ஐந்து சக்தி மாதிரிக்கு சர்வதேச வலையமைப்பின் தாக்கம் பற்றி சுருக்கமாகக் கூறுக.

(05 புள்ளிகள்)

ஆ) கீழ்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்புக்கள் எழுதுக.

* தேடு பொறிகள் (04 புள்ளிகள்)

* இலத்திரனியல் வர்த்தகம் (04 புள்ளிகள்)

இ) இலங்கையில் இலத்திரனியல் வர்த்தகத்தின் தற்காலம் எதிர்காலம் பற்றி சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(தொடர்.........3ல்)

05. அ) வாடிக்கையாளர் பக்க அல்லது இணைய Programming லுள்ள முக்கிய காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) இலத்திரனியல் வியாபார மாதிரிகள், இரண்டு பகுதிகளுக்குள் அடக்கப்படுகின்றன. அவற்றைச் சுருக்கமாக விளக்குக.




(10 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

*****